# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

செய்தி வெளியீடு எண்.09/2021 நாள் 13.09.2021

## செய்தி வெளியீடு

மாண்பமை உச்ச நீதிமன்றம் IA No.182868/2019 in CA Nos.5467-5469/2017 மற்றும் தொடர்புடைய வழக்குகளில் 6.12.2019 அன்று வழங்கிய ஆணையில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வார்டு மறுவரையறை செய்த பின்னர் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் 27.12.2019 மற்றும் 30.12.2019 ஆகிய தேதிகளில் உள்ளாட்சி தேர்தலை நடத்தியது. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் 6.1.2020 அன்று பதவியேற்றுக்கொண்டனர்.

மாண்பமை உச்ச நீதிமன்றம் M.A.No.821/2021 in M.A.2120/2020 in W.P.(Civil) No.1443/2019 வழக்கில் 22.6.2021 அன்று வழங்கிய ஆணையில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்களுக்கான அறிவிக்கைகளை வெளியிட்டு 15.9.2021-க்குள் தேர்தல் முடிவுகளை அறிவிக்க தெரிவித்திருந்தது.

மேற்படி மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்ட அறிவிக்கைகள் 03.08.2021 அன்று வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து உள்ளாட்சித் தேர்தல்களுக்கான வாக்குச்சாவடி பட்டியல்கள் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் தயாரித்து 31.08.2021 அன்று வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அனைத்து தேர்தல் முன்னேற்பாடு பணிகளையும் மேற்கொண்டு ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்த வேண்டிய 9 மாவட்டங்களான காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இரண்டு கட்டமாக 06.10.2021மற்றும் 09.10.2021 ஆகிய தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதற்கான தேர்தல் அறிவிக்கை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் 15.09.2021 அன்று வெளியிடப்படும். வேட்பு மனு தாக்கல் 15.09.2021 அன்று துவங்கும். வேட்புமனுக்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பெறப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் விடுத்த கோரிக்கைகளின்படி, வாக்குப்பதிவு நேரம் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுடன் கலந்தாலோசனை செய்து வாக்குப்பதிவினை காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடத்திட ஆணையம் முடிவெடுத்துள்ளது. இதில் கடைசி ஒருமணி நேரம் அதாவது மாலை 5.00 மணி முதல் 6.00 மணிவரை கோவிட்-19 அறிகுறி உள்ளவர்கள் மற்றும் பாதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர். வாக்கு எண்ணிக்கை 12.10.2021 அன்று காலை 8.00 மணிக்கு தொடங்கும்.

கோவிட்-19 பெருந்தொற்று தொடர்பான நிலையான இயக்கு செயல்முறைகளை பின்பற்றி சமூக இடைவெளி மற்றும் பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு இத்தேர்தல்களை நடத்திட ஆணையம் முடிவெடுத்துள்ளது. ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்திட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

### தேர்தல் அட்டவணை

| | | |
|---|---|---|
| 1. | தேர்தல் அறிவிப்பு பிரசுரித்தல் மற்றும் வேட்பு மனுக்கள் பெறுதல் | 15.09.2021 |
| 2. | வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் | 22.09.2021 |
| 3. | வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல் | 23.09.2021 |
| 4. | வேட்பு மனுக்களை திரும்பப் பெறுதல் | 25.09.2021 |
| 5. | வாக்குப்பதிவு நடைபெறும் நாள்<br>சாதாரண தேர்தல் நடைபெற உள்ள 9 மாவட்டங்களில் | |
| | முதல் கட்ட வாக்குப்பதிவு | 06.10.2021 |
| | இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு | 09.10.2021 |
| | தற்செயல் தேர்தல் (Casual Election) நடைபெற உள்ள ஏனைய 28 மாவட்டங்களில் வாக்குப்பதிவு | 09.10.2021 |
| 6. | வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | 12.10.2021 |
| 7. | தேர்தல் நடவடிக்கைகள் முடிவுபெறும் நாள் | 16.10.2021 |
| 8. | தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களின் முதல் கூட்டம் மற்றும் பதவி ஏற்பு நாள் | 20.10.2021 |
| 9. | சாதாரணத் தேர்தல் நடைபெறவுள்ள 9 மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர் / துணைத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சித் துணைத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தலுக்கான கூட்ட நாள் | 22.10.2021 |

### நேரடித் தேர்தல்கள் நடைபெற உள்ள பதவியிடங்கள்

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி வாக்காளர்களைக் கொண்டு -

- ❖ 9 மாவட்ட ஊராட்சிகளுக்கு உட்பட்ட 140 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களும்,
- ❖ 74 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 1,381 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களும்,
- ❖ 2,901 கிராம ஊராட்சித் தலைவர் பதவியிடங்களும் 22,581 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களும்

என மொத்தம் 27,003 பதவியிடங்களுக்கு ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

**கட்சி அடிப்படையில் மற்றும் கட்சி அடிப்படையில் அல்லாமல் நடைபெறும் தேர்தல்கள்**

கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கான தேர்தல் கட்சி அடிப்படையில் இல்லாமலும், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கான தேர்தல் கட்சி அடிப்படையிலும் நடைபெறும்.

**இரண்டு கட்ட தேர்தல்**

- ❖ முதல் கட்ட வாக்குப்பதிவு 9 மாவட்டங்களில் உள்ள 39 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 78 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், 755 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், 1,577 கிராம ஊராட்சி தலைவர் பதவியிடங்களுக்கும், 12,252 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் 06.10. 2021 அன்று நடைபெறும்.
- ❖ இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு 9 மாவட்டங்களில் உள்ள 35 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 62 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், 626 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், 1,324 கிராம ஊராட்சி தலைவர் பதவியிடங்களுக்கும், 10,329 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் 09.10.2021 அன்று நடைபெறும்.

**வாக்குகள்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய 4 தேர்தல்களும் ஒரே நேரத்தில் நடைபெறுவதால், 4 விதமான வாக்குச்சீட்டுக்கள் பயன்படுத்தப்படும். கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் தேர்தலுக்கு வெள்ளை நிறத்திலும், கிராம ஊராட்சித் தலைவர்கள் தேர்தலுக்கு இளஞ்சிவப்பு நிறத்திலும் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தேர்தலுக்கு பச்சை நிறத்திலும், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் தேர்தலுக்கு மஞ்சள் நிறத்திலும் வாக்குச் சீட்டுகள் பயன்படுத்தப்படும். இரண்டு கிராம ஊராட்சி வார்டுகளுக்கு பொதுவாக அமைக்கப்படும் ஒரு வாக்குச் சாவடியில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலுக்கு இரண்டு வண்ணங்களில் வாக்குச்சீட்டுக்கள் பயன்படுத்தப்படும். அதில் ஒரு

கிராம ஊராட்சி வார்டிற்கு வெள்ளை நிறத்திலும் பிரிதொரு வார்டிற்கு இள நீல நிறத்திலும் வாக்குச் சீட்டுகள் பயன்படுத்தப்படும்.

**வாக்குச்சாவடிகள்**

9 மாவட்டங்களில், முதல் கட்ட வாக்குப்பதிவு 7,921 வாக்குச்சாவடிகளிலும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு 6,652 வாக்குச்சாவடிகளிலும், ஆகமொத்தம் 14,573 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறும்.

**வாக்காளர்கள்**

நடப்பு சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலில் உள்ள அடிப்படை விவரங்களை (data base) கொண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல்களை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், தேசிய தகவலியல் மையத்துடன் இணைந்து online முறையில் உள்ளாட்சித் தேர்தலுக்கான புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்துள்ளது.

- இத்தேர்தலில், 37 லட்சத்து 77 ஆயிரத்து 524 ஆண் வாக்காளர்களும், 38 லட்சத்து 81 ஆயிரத்து 361 பெண் வாக்காளர்களும், 835 மூன்றாம் பாலின வாக்காளர்களும் ஆகமொத்தம் 76 லட்சத்து 59 ஆயிரத்து 720 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

- இதில் முதல் கட்டத் தேர்தலில் 41 லட்சத்து 93 ஆயிரத்து 996 வாக்காளர்களும், இரண்டாம் கட்டத் தேர்தலில் 34 லட்சத்து 65 ஆயிரத்து 724 வாக்காளர்களும் வாக்களிக்க உள்ளனர்.

**தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் விபரம்**

- இத்தேர்தலில் 171 தேர்தல் நடத்தும் அலுவலர்களும், 3,777 உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்களும் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

- ஊராட்சி தேர்தலுக்காக சுமார் 1,10,000 அலுவலர்கள் வாக்குப்பதிவுப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

**வாக்குப்பெட்டிகள்**

இத்தேர்தலில் வாக்குப்பதிவிற்கு சுமார் 41,500 வாக்குப்பெட்டிகள் பயன்படுத்தப்பட உள்ளன.

**தேர்தல் பார்வையாளர்கள்**

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர் (IAS) ஒருவர் வீதம் தேர்தல் பணிகளை மேற்பார்வையிட தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கப்பட உள்ளனர்.

பொது

- வேட்பாளர்களின் கல்வித் தகுதி, சொத்து விபரம் மற்றும் குற்றவியல் விபரங்களை வாக்காளர்கள் அறிந்துகொள்ளும் வகையில் வேட்பு மனுவுடன் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் ஆணை உறுதி ஆவணம் (Affidavit) வேட்பாளர்களால் படிவம்

3-A-ல் தாக்கல் செய்ய வேண்டும். கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலுக்காக போட்டியிடும் வேட்பாளர்கள் சாற்றுரை (Declaration) அளித்தால் போதுமானது.

- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளும் படிவம் "A" மற்றும் படிவம் "B" ஆகியவற்றைப் பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவித் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு திரும்பப்பெறும் நாளன்று பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாகச் சேர்ப்பிக்க வேண்டும். காலம் கடந்து படிவங்கள் பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் சுயேட்சை வேட்பாளராக மட்டுமே கருதப்படுவார்.

- பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளுக்கு சின்னங்கள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

**தேர்தல் வைப்புத் தொகை (Deposits)**

தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்பவர்கள் பின்வருமாறு வைப்புத்தொகை செலுத்த வேண்டும்.

**வேட்பாளர் வைப்புத் தொகை**

| | ரூ. |
|---|---|
| கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 200 |
| கிராம ஊராட்சித் தலைவர் தேர்தல் | 600 |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தல் | 600 |
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 1000 |

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்கள்**

| | ரூ. |
|---|---|
| கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 100 |
| கிராம ஊராட்சித் தலைவர் தேர்தல் | 300 |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தல் | 300 |
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 500 |

**தேர்தல் செலவினங்கள்**

வேட்பாளர்களுக்கான அதிகபட்ச தேர்தல் செலவின வரம்பானது கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு ரூ.9,000-மும், கிராம ஊராட்சி தலைவர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு ரூ.34,000-மும், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு ரூ.85,000-மும், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு ரூ.1,70,000-மும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 தினங்களுக்குள் உரிய அலுவலரிடம் தேர்தல் செலவினக் கணக்குகளை ஒப்படைத்திட வேண்டும். ஒப்படைக்கத் தவறுபவர்கள் மீது தேர்தல் ஆணையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட இயலாதவாறு மூன்று ஆண்டுகளுக்கு தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.

**பாதுகாப்பு ஏற்பாடுகள்**

- ❖ மக்கள் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் வாக்களிக்க ஏதுவாகவும், வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப்பதிவு பொருட்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லவும், அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெறுவதை உறுதி செய்திடவும் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ❖ பதட்டம் நிறைந்த வாக்குச்சாவடிகள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களால் கண்டறியப்பட்டு அதிகபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் அளிக்கப்படுவதோடு, அந்த வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடவடிக்கைகளை வீடியோ கிரா.ஃபி (Videography) / நுண் தேர்தல் மேற்பார்வையாளர்கள் (Micro Observer) / இணையதள கண்காணிப்பு (Web streaming) மூலம் பதிவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மறைமுகத் தேர்தல்கள்**

சாதாரண நேரடித் தேர்தல்கள் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளைக் கொண்டு பின்வரும் பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல்கள் 22.10.2021 அன்று நடைபெறும்.

| | |
|---|---|
| மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவியிடங்கள் | 9 |
| மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் பதவியிடங்கள் | 9 |
| ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவியிடங்கள் | 74 |
| ஊராட்சி ஒன்றியத் துணைத்தலைவர் பதவியிடங்கள் | 74 |
| கிராம ஊராட்சி துணைத்தலைவர் பதவியிடங்கள் | 2,901 |
| மொத்தம் | 3,067 |

**தற்செயல் தேர்தல்கள் (Casual Elections)**

ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் 2019-ல் நடத்தப்பட்ட 28 மாவட்டங்களில் நிரப்பப்படாத பதவியிடங்கள் மற்றும் ஜுன் 2021 வரை ஏற்பட்டுள்ள காலியிடங்களான 13 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், 40 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள், 106 கிராம ஊராட்சி தலைவர் பதவியிடங்கள் மற்றும் 630 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்கள் என 789 பதவியிடங்களுக்கு உள்ளாட்சிப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப்பதிவு ஒரே கட்டமாக 09.10.2021 அன்று நடைபெறும். இதற்கான தேர்தல் அறிவிக்கைகள் 15.09.2021 அன்று வெளியிடப்படும். வேட்பு மனு தாக்கல் 15.09.2021 அன்று துவங்கும். வேட்புமனுக்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பெறப்படும். வாக்குப்பதிவு காலை 7.00 மணிக்கு துவங்கி மாலை 6.00 மணியுடன் முடிவடையும். இதில் கடைசி ஒருமணி நேரம் அதாவது மாலை 5.00 மணி முதல் 6.00 மணிவரை கோவிட்-19 அறிகுறி உள்ளவர்கள் மற்றும் பாதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர். வாக்கு எண்ணிக்கை 12.10.2021 அன்று காலை 8.00 மணிக்கு தொடங்கும்.

28 மாவட்டங்களில் நடைபெறும் தற்செயல் தேர்தல்களில் 2,802 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறும். இதில் 6 லட்சத்து 79 ஆயிரத்து 631 ஆண் வாக்காளர்களும், 6 லட்சத்து 96 ஆயிரத்து 267 பெண் வாக்காளர்களும், 94 மூன்றாம் பாலின வாக்காளர்களும் ஆகமொத்தம் 13 லட்சத்து 75 ஆயிரத்து 992 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

**தேர்தல் நடத்தை விதிகள்**

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் அனைத்து ஊரக பகுதிகளுக்கும், அந்த ஊரக உள்ளாட்சி அமைப்பிற்கு அருகில், 5 கி.மீ. சுற்றளவு பகுதி வரை அந்தந்த மாவட்டங்களுக்குள் தேர்தல் நடத்தை விதிகள் தேர்தல் நடவடிக்கைகள் முடியும் வரை அமலில் இருக்கும்.

தற்செயல் தேர்தல்கள் நடைபெறும் 28 மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலைப் பொறுத்தவரை தொடர்புடைய மாவட்ட ஊராட்சி வார்டின் கீழ் அடங்கும் அனைத்து ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்கும், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தலைப் பொறுத்தவரை தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய பகுதி முழுமைக்கும், கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல்களைப் பொறுத்தவரை தொடர்புடைய கிராம ஊராட்சி பகுதி முழுமைக்கும் தேர்தல் நடத்தை விதிகள் தேர்தல் நடவடிக்கைகள் முடியும் வரை அமலில் இருக்கும்.

அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும், தேர்தல் நடத்தை விதிகளைக் கடைபிடித்து, தேர்தல் அமைதியாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெற எல்லா விதத்திலும் தேர்தல் ஆணையத்தோடு ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள்**

மாற்றுத் திறனாளிகள் எளிதாக வாக்களிப்பதற்கு ஏதுவாக வாக்குச்சாவடிகளில் சாய்வு தளம் (Ramp), சக்கர நாற்காலி (Wheel chair) மற்றும் துணையாள் (helper)ஆகிய முன்னேற்பாடுகள் செய்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

**கோவிட்-19 பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கை**

கோவிட்-19 பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளாட்சித் தேர்தலை நடத்திட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் 07.09.2021 அன்று மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது சுகாதாரம், நோய் தடுப்பு மருந்து இயக்குநர் மற்றும் அலுவலர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் உள்ளாட்சித் தேர்தலில் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை முடிவுசெய்து அதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட 13 பொருட்களை அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் வழங்கிட தக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

வெப்பமானி (thermometer), கை சுத்திகரிப்பான் (hand sanitizer), முகக்கவசம் (face shield), முகமூடி (face mask), கை உறைகள் (rubber gloves), பிபிஇ கிட்ஸ் (PPE kits), டி-கட் பேக்ஸ் (D-Cut bags), வாக்காளர்களுக்கான கையுறைகள் (polyethylene hand gloves) போன்றவைகள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், தமிழ்நாடு மருத்துவக் கழகத்தின் மூலமாக வாங்கி மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரவுன் டேப் (brown tape), பஞ்சு (cartons) மற்றும் குப்பை வாளிகள் (dustbins/buckets) போன்றவை மாவட்ட அளவில் கொள்முதல் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், முன்னுரிமை அடிப்படையில் 9 மாவட்டங்களுக்கு தடுப்பூசி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

13/9/2021

மக்கள் தொடர்பு அலுவலர்

# முதல் கட்ட வாக்குப்பதிவு

## முதல் கட்ட வாக்குப்பதிவில் அடங்கிய மாவட்ட ஊராட்சி வார்டுகள், ஊராட்சி ஒன்றிய வார்டுகள், கிராம ஊராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சி வார்டுகளை உள்ளடக்கிய ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | 1 | இலத்தூர் |
| | | 2 | புனித தோமையார்மலை |
| | | 3 | திருக்கழுக்குன்றம் |
| | | 4 | திருப்போரூர் |
| 2 | காஞ்சிபுரம் | 5 | காஞ்சிபுரம் |
| | | 6 | உத்திரமேரூர் |
| | | 7 | வாலாஜாபாத் |
| 3 | விழுப்புரம் | 8 | செஞ்சி |
| | | 9 | கண்டமங்கலம் |
| | | 10 | முகையூர் |
| | | 11 | ஒலக்கூர் |
| | | 12 | திருவெண்ணெய்நல்லூர் |
| | | 13 | வானூர் |
| | | 14 | விக்கிரவாண்டி |
| 4 | கள்ளக்குறிச்சி | 15 | ரிஷிவந்தியம் |
| | | 16 | திருநாவலூர் |
| | | 17 | திருக்கோவிலூர் |
| | | 18 | உளுந்தூர்பேட்டை |
| 5 | வேலூர் | 19 | குடியாத்தம் |
| | | 20 | கீ.வ.குப்பம் |
| | | 21 | காட்பாடி |
| | | 22 | பேர்ணாம்பட்டு |
| 6 | இராணிப்பேட்டை | 23 | ஆற்காடு |
| | | 24 | திமிரி |
| | | 25 | வாலாஜா |
| 7 | திருப்பத்தூர் | 26 | சோலையார்பேட்டை |
| | | 27 | கந்திலி |
| | | 28 | நாட்றம்பள்ளி |
| | | 29 | திருப்பத்தூர் |
| 8 | திருநெல்வேலி | 30 | அம்பாசமுத்திரம் |
| | | 31 | சேரன்மகாதேவி |
| | | 32 | மானூர் |
| | | 33 | பாளையங்கோட்டை |
| | | 34 | பாப்பாக்குடி |
| 9 | தென்காசி | 35 | ஆலங்குளம் |
| | | 36 | கடையம் |
| | | 37 | கீழப்பாவூர் |
| | | 38 | மேலநீலிதநல்லூர் |
| | | 39 | வாசுதேவநல்லூர் |

# இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு

## இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் அடங்கிய மாவட்ட ஊராட்சி வார்டுகள், ஊராட்சி ஒன்றிய வார்டுகள், கிராம ஊராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சி வார்டுகளை உள்ளடக்கிய ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | 1 | அச்சிறுபாக்கம் |
| | | 2 | சித்தாமூர் |
| | | 3 | காட்டாங்கொளத்தூர் |
| | | 4 | மதுராந்தகம் |
| 2 | காஞ்சிபுரம் | 5 | குன்றத்தூர் |
| | | 6 | திருப்பெரும்புதூர் |
| 3 | விழுப்புரம் | 7 | காணை |
| | | 8 | கோலியனூர் |
| | | 9 | மயிலம் |
| | | 10 | மரக்காணம் |
| | | 11 | மேல்மலையனூர் |
| | | 12 | வல்லம் |
| 4 | கள்ளக்குறிச்சி | 13 | சின்னசேலம் |
| | | 14 | கள்ளக்குறிச்சி |
| | | 15 | கல்வராயன்மலை |
| | | 16 | சங்கராபுரம் |
| | | 17 | தியாகதுருகம் |
| 5 | வேலூர் | 18 | அணைக்கட்டு |
| | | 19 | கணியம்பாடி |
| | | 20 | வேலூர் |
| 6 | இராணிப்பேட்டை | 21 | அரக்கோணம் |
| | | 22 | காவேரிப்பாக்கம் |
| | | 23 | நெமிலி |
| | | 24 | சோளிங்கர் |
| 7 | திருப்பத்தூர் | 25 | ஆலங்காயம் |
| | | 26 | மாதனூர் |
| 8 | திருநெல்வேலி | 27 | களக்காடு |
| | | 28 | நான்குனேரி |
| | | 29 | இராதாபுரம் |
| | | 30 | வள்ளியூர் |
| 9 | தென்காசி | 31 | கடையநல்லூர் |
| | | 32 | குருவிகுளம் |
| | | 33 | சங்கரன்கோவில் |
| | | 34 | செங்கோட்டை |
| | | 35 | தென்காசி |

ஊரக உள்ளாட்சி அமைப்புகள் - நேரடித் தேர்தல்கள்

தற்செயல் தேர்தல் நடைபெறவுள்ள பதவியிடங்கள்

| வ.எண் | மாவட்டம் | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | கிராம ஊராட்சி தலைவர் | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அரியலூர் | - | - | 3 | 13 | 16 |
| 2. | கோயமுத்தூர் | 1 | - | 2 | 13 | 16 |
| 3. | கடலூர் | - | 5 | 10 | 33 | 48 |
| 4. | தருமபுரி | 1 | - | 1 | 12 | 14 |
| 5. | திண்டுக்கல் | - | 2 | 4 | 22 | 28 |
| 6. | ஈரோடு | 1 | 2 | 4 | 20 | 27 |
| 7. | கன்னியாகுமரி | - | - | 1 | 9 | 10 |
| 8. | கரூர் | 1 | 1 | 1 | 12 | 15 |
| 9. | கிருஷ்ணகிரி | - | 1 | 3 | 18 | 22 |
| 10. | மதுரை | 1 | - | 1 | 23 | 25 |
| 11. | மயிலாடுதுறை | - | 2 | 1 | 15 | 18 |
| 12. | நாகபட்டிணம் | - | - | 3 | 9 | 12 |
| 13. | நாமக்கல் | 1 | 1 | 5 | 18 | 25 |
| 14. | பெரம்பலூர் | - | - | 1 | 6 | 7 |
| 15. | புதுக்கோட்டை | 1 | 1 | 5 | 41 | 48 |
| 16. | இராமநாதபுரம் | 1 | - | 6 | 33 | 40 |
| 17. | சேலம் | 1 | 1 | 10 | 23 | 35 |
| 18. | சிவகங்கை | - | 2 | 2 | 34 | 38 |
| 19. | தஞ்சாவூர் | 1 | 2 | 6 | 43 | 52 |
| 20. | நீலகிரி | - | 2 | - | 1 | 3 |
| 21. | தேனி | - | 2 | 1 | 6 | 9 |
| 22. | திருவண்ணாமலை | - | 3 | 11 | 52 | 66 |
| 23. | தூத்துகுடி | - | - | 7 | 41 | 48 |
| 24. | திருச்சிராப்பள்ளி | - | 3 | 2 | 19 | 24 |
| 25. | திருப்பூர் | 1 | 1 | 3 | 14 | 19 |
| 26. | திருவள்ளூர் | - | 4 | 4 | 30 | 38 |
| 27. | திருவாரூர் | 1 | 2 | 5 | 24 | 32 |
| 28. | விருதுநகர் | 1 | 3 | 4 | 46 | 54 |
| கூடுதல் | | **13** | **40** | **106** | **630** | **789** |